ஆடலேற்றினான் கூடல் ஆலவாய் பாடியே மனம் நாடி வாழ்மினே



உ
சிவமயம்

# ஆறாம் திருநாள்

# ரிஷபவாகன உலா - சைவ சமய ஸ்தாபித வரலாற்றுலீலை

**நாள்: 03.05.2017** 1426 - ஆம் பசலி, திருவள்ளுவர் ஆண்டு - 2048 சித்திரை - 20 **கிழமை : புதன்கிழமை**

| | |
|---|---|
| காலை எழுந்தருளும் நேரம் | : 7.30 மணியளவில் |
| எழுந்தருளும் வீதிகள் | : நான்கு மாசி வீதிகள் |
| வாகனம் | : தங்கச்சப்பரம் |
| எழுந்தருளும் மண்டபம் | : கோயிலுக்குள் சிவகங்கைராஜா மண்டகப்படி |
| திருவீதிஉலா முடிவுற்று திருக்கோயிலுக்கு வந்து சேரும் நேரம் | : காலை 9.30 மணியளவில் |

| | |
|---|---|
| இரவு எழுந்தருளும் நேரம் | : 7.30 மணியளவில் |
| எழுந்தருளும் வீதிகள் | : நான்கு மாசி வீதிகள் |
| வாகன விபரம் | : தங்க ரிஷபம்<br>வெள்ளி ரிஷபம் |
| திருவீதிஉலா முடிவுற்று திருக்கோயிலுக்கு வந்து சேரும் நேரம் | : இரவு 11.00 மணியளவில் |

விபரம்: மாலை 6.00 மணிக்கு யானை மஹால் முன்பு மதுரை திரு.கே.முரளிதரன் குடும்பத்தினர் கட்டளை திருக்கண் ஆகிய பின்பு

**அருள்மிகு திருஞானசம்பந்தப்பெருமான் சைவ சமயத்தை நிலைநாட்டிய வரலாறு**

(சைவ சமய ஸ்தாபித வரலாற்றுலீலை) தல ஓதுவாரால் சொல்லப்பட்டு பின் வீதிக்கு எழுந்தருளல்





**ரிஷப வாகனம்**

பாசமான களைவார் பரிவார்க்கு அமுதம் அனையார்
ஆசைதீரக் கொடுப்பார் அலங்கல் விடைமேல் வருவார்
காசை மலர் போல் மிடற்றார் கடவூர் மயானம் அமர்ந்தார்
பேச வருவார் ஒருவர் அவர் எம்பெருமானடிகளே.

- சம்பந்தர் தேவாரம்

## திருவிழா தத்துவமும் பலனும் :

ஆறாம் நாள் திருவிழா காமாதி ஆறும், கலையாதி ஆறும், பதமுத்தி ஆறும், வினைக்குணம் ஆறினையும் ஒழித்தற் பொருட்டு நிகழ்வதாகும். ஆறாம் நாள் இரவு விருபவாகன சேவை மிகவும் முக்கியமானது. அடியார்களுக்கு ஆண்டவன் அருள்புரிய விருபவாகனத்தில் எழுந்தருளி வருவதை புராணாதிகளால் நன்கு அறியலாம். அருள்பெற்ற ஆன்மா விருபமாகும். அதன் வெள்ளைநிறம் அதனிடத்து எவ்வித மாசும் இல்லை என்பதை உணர்த்தும். தர்மம் என்ற அறத்தையே நான்கு கால்களாகக் கொண்டுள்ளது. சமம், விசாரம், சந்தோம், சாதுங்கம் என்ற நான்கு அறங்களும் நான்கு கால்களாய் அமைந்துள்ளன. மாசற்ற அறவடிவமான ஆன்மாக்களிடத்து இறைவன் வந்து அமர்வான் என்பதை இது குறிக்கின்றது. இது அனுக்கிரகக் கோலம்.

